முருகப்பெருமான் துணை

**மகான் பராசரிஷி அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**30.07.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. தயவாக ஞான வழி காட்டும்
தருமனே ஆறுமுக அரங்கனே
நேயமுடன் உன் பெருமை கூறி
நிலமதனில் அறிவுரை ஆசி தன்னை
2. ஆசிதன்னை சோபகிருது நள்ளி திங்கள்
அறிவிக்க முன்னான்கீர் திகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் ஆடி மாதம் 14 ம் நாள், 30.07.2023, ஞாயிற்றுக்கிழமை)
நேசமுடன் பராசரிஷி யானும்
ஞானவான்கள் உலகெலாம் பெருக
3. பெருகவே வழிகாட்டல் உரைப்பேன்
பிரம்ம ஞான ரகசியம் கண்டு
ஆறுமுகனார் ஆசிபட வந்த
அரங்க ஞானியே கலியின் சிறந்த குரு
4. குருவருளை வேண்டி மக்கள்
குறைவிலா அரங்கன் வாழ்
திருவருள் நிறைந்த பிரணவக்குடிலை
தேடி அடைந்து வருதலுற
5. வருகவே வினை வழி இடர்
வலியதாயினும் கரைந்தோடி
தரும சிந்தை தானாகப் பெருகும்
தவசி அரங்கமகானை கண்டு
6. கண்டு வணங்கித் தீட்சை
கருணைமிக்க கரங்கள்பட ஏற்க
உண்டாகும் மெய்ஞான பலம்
உண்மை வழிகள் விளங்கி

7. விளங்கித் தன்பிறவிப் பயன்
   வினவிட நோக்கம் அனைத்தும்
   களங்கமற பூர்த்தியாகி நன்கு
   கடைத்தேற்றம் தன்னை அடைய நேரும்
8. நேருமைபட வாழும் காலமே
   நிலவுலகில் எவ்வுயிர்க்கும் இடர்தரா
   பெருமை தயவு மிகுந்தநல்
   புண்ணிய வழிகளை தொடர்ந்து
9. தொடர்ந்து அரங்கன் ஞானவழி
   தூயவர்களாகி மேலவர்களுள்
   தடையற தேறிச் சிறந்து
   தரணியில் ஞானவான்களாக
10. ஆகவே மக்கள் படைகள்
   அரங்கனால் அளவிலாப் பெருகி
   செகமெங்கும் ஞானபலமும்
   சித்திமிகு ஞானிகள் வெளிப்பட
11. வெளிப்பட ஞானத் தலைமை
   வேலவன் ஆசிபட இனிதே
   களிப்புற ஞான ஆட்சி மலரும்
   கண்டுரைத்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—